TNPSC JOB

Reg. No.: | | | | | | |

# அரையாண்டுப் பொதுத்தேர்வு - 2025

## வகுப்பு-9

காலம் : 2.30 மணி

## தமிழ்

மதிப்பெண்கள்:100

பகுதி - I

உரிய விடையைக் குறியீட்டுடன் தேர்ந்தெடுத்து எழுதுக. **15 x 1 = 15**

1. திணை, பால், எண் ஆகியவற்றை உணர்த்தும் பால்காட்டும் விகுதிகள் இல்லாத திராவிட மொழி எது?
   அ) தமிழ் ஆ) தெலுங்கு இ) மலையாளம் ஈ) கன்னடம்
2. பின்வருவனவற்றுள் அளபெடை இடம் பெறாத தொடர் எது?
   அ) குக்கூஉ எனக் குயில் கூவியது
   ஆ) கொக்கரக்கோஓ எனச் சேவல் கூவியது
   இ) அண்ணாஅ என அழைத்தான்
   ஈ) ஓடிவா ஓடிவா
3. பெயரடை இடம் பெறாத் தொடரைக் கண்டறிக.
   அ) நல்ல நண்பன் ஆ) இனிய வணக்கம் இ) எந்த ஓவியம்? ஈ) கொடிய விலங்கு
4. பைங்கூழ் வளர்ந்து ஆகுபெயரின் வகையைக் கண்டறிக.
   அ) காலவாகுபெயர் ஆ) காரியவாகுபெயர் இ) கருவியாகுபெயர் ஈ) கருத்தாவாகுபெயர்
5. 'மாடு' என்பதன் பொருள் என்ன?
   அ) கீழே ஆ) மேலே இ) பக்கம் ஈ) தொலைவு
6. பகுதி, விகுதி மட்டும் இடம்பெறும் சொல் எது?
   அ) வென்றார் ஆ) நடந்த இ) வளர்க ஈ) பொருந்திய
7. கல்வி இல்லாப் பெண்கள் எவ்வகை நிலத்திற்கு ஒப்பானவர்கள்?
   அ) நஞ்சை நிலம் ஆ) களர்நிலம் இ) உவர்நிலம் ஈ) புஞ்சை நிலம்
8. சரியான கூற்றினைத் தெரிவு செய்க.
   அ) வில்லுப்பாட்டு ஓர் இலக்கிய வடிவம்
   ஆ) தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர் முத்துலெட்சுமி
   1) அ மட்டும் சரி 2) அ, ஆ இரண்டும் சரி 3) அ, ஆ இரண்டும் தவறு
   4) ஆ மட்டும் சரி
9. பல்லவர் காலச் சிற்பக் கலைக்குச் சிறந்த சான்று
   அ) மாமல்லபுரம் ஆ) பிள்ளையார்பட்டி இ) திரிபுவன வீரேசுவரம் ஈ) தாடிக்கொம்பு
10. இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் வல்லினம் மிகும் என்பதற்கான எடுத்துக்காட்டு
    அ) தனிச்சிறப்பு ஆ) தைத்திங்கள் இ) வடக்குப் பக்கம் ஈ) நிலாச்சோறு
11. இராவண காவியத்தை எழுதியவர் .......
    அ) புலவர் குழந்தை ஆ) புகழேந்திப்புலவர் இ) கம்பர் ஈ) வில்லிபுத்தூரார்

பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.

'முதிரையும் சாமையும் வரகும் மொய்மணிக்
குதிரைவா லியும்களம் குவித்துக் குன்றெனப்
பொதுவர்கள் பொலிஉறப் போர்அ டித்திடும்
அதிர்குரல் கேட்டுஉழை அஞ்சி ஓடுமே!

12. பாடல் இடம் பெற்ற நூல் எது?
    அ) பெரியபுராணம் ஆ) இராவண காவியம் இ) தமிழோவியம் ஈ) மணிமேகலை
13. இந்நூலின் ஆசிரியர் யார்?
    அ) கம்பர் ஆ) புலவர் குழந்தை இ) புகழேந்திப்புலவர் ஈ) வில்லிபுத்தூரார்
14. 'உழை' -இச்சொல்லின் பொருள் தருக.

Scanned with Cam

TNPSC JOB



அ) சிங்கம் ஆ) கரடி இ) புலி ஈ) மான்

15. பாடலில் இடம்பெற்றுள்ள அடிஎதுகைகளை எழுதுக.

அ) முதிரையும் – சாமையும் ஆ) முதிரையும் குதிரை

இ) பொதுவர்கள் – பொலிஉற ஈ) அதிர்குரல் – அந்தி

## பகுதி – II

### பிரிவு – 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.
(21வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க) 4 x 2 = 8

16. தென்திராவிட மொழிகள் ஏதேனும் நான்கினை எழுதுக.

17. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.

அ) பெண்கள் முன்னேற்றத்திற்குத் தடைக்கல்லாய் இருப்பது திருமணம்.

ஆ) பாகிஸ்தானில் பெண்கல்வி வேண்டுமெனப் போராட்டக் களத்தில் இறங்கியவர் மலாலா.

18. நிலையான வானத்தில், தோன்றி மறையும் காட்சியைப் பெரியபுராணம் எதனுடன் ஒப்பிடுகிறது?

19. பெண்களுக்கு எப்போதும் கல்வி வேண்டும் என்பதைக் 'குடும்ப விளக்கு' கருத்தின் வழி எழுதுக.

20. நிலம்போல யாரிடம் பொறுமை காக்க வேண்டும்?

21. 'தூண்' என முடியும் திருக்குறளை அடிபிறழாமல் எழுதுக.

### பிரிவு – 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. 5 x 2 = 10

22. தொடரைப் பழமொழிகொண்டு நிறைவு செய்க.

அ) இளமையில் கல்வி ..........

ஆ) கற்றோர்க்குச் சென்ற ..........

23. கலைச்சொற்கள் தருக.

அ) Conical stone ஆ) Hero stone

24. பொருள் எழுதித் தொடரமைக்க.

வாளை, வாழை

25. பகுபத உறுப்பிலக்கணம் தருக.

பூக்கும்

26. அளபெடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

27. மரபு இணைச்சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

அ) கண்ணும் கருத்தும் ஆ) நகமும் சதையும்

28. பிழை நீக்கி எழுதுக.

அ) பவளவிழிதான் பரிசு உரியவள்

ஆ) நல்ல தமிழுக்கு எழுதுவோம்

## பகுதி – III

### பிரிவு – 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. 2 x 3 = 6

29. அடுத்த தலைமுறையினருக்கும் தண்ணீர் தேவை – அதற்கு நாம் செய்ய வேண்டியவற்றை எழுதுக.

30. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

Scanned with Cam

TNPSC JOB | www.tnpscjob.com

TNPSC JOB



சொற்களின் இன்றியமையாத பகுதி வேர்ச்சொல் அல்லது அடிச்சொல் எனப்படும். திராவிட மொழிகளின் சொற்களை ஆராய்ந்தால் அவை பொதுவான வேர்ச்சொற்களைக் கொண்டிருப்பதைக் காண முடிகிறது. திராவிட மொழிகளில் உயிர் எழுத்துகளில் உள்ள குறில், நெடில் வேறுபாடுகள் பொருளை வேறுபடுத்தத் துணை செய்கின்றன.

அ) சொற்களின் இன்றியமையாத பகுதி எது?

ஆ) எம்மொழிகளின் சொற்கள் பொதுவான வேர்ச்சொற்களைக் கொண்டுள்ளன?

இ) திராவிட மொழிகளில் பொருளை வேறுபடுத்தத் துணை செய்வன யாவை?

31. முழு உருவச் சிற்பங்கள் – புடைப்புச் சிற்பங்கள் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு யாது?

பிரிவு – 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். (34வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும்) 2 x 3 = 6

32. தமிழ்விடு தூது உணர்த்தும் தமிழின் சிறப்புகளை எழுதுக.

33. திருப்பாவை குறிப்பிடும் காலை வழிபாட்டு நிகழ்வை விளக்குக.

34. 'காடெல்லாம்' எனத் தொடங்கும் பெரியபுராணப் பாடலை அடிபிறழாமல் எழுதுக. (அல்லது)
'கல்லிடைப் பிறந்த' எனத் தொடங்கும் இராவண காவியப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

பிரிவு – 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. 2 x 3 = 6

35. அளவையாகுபெயர்களின் வகைகளை விளக்குக.

36. எண்ணுப் பெயர், திசைப்பெயர்களில் வல்லினம் மிகுந்து வருவதைச் சான்றுடன் எழுதுக.

37. அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண் – இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்கி எழுதுக.

பகுதி – IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 5 x 5 = 25

38. குடும்ப விளக்கு நூலில் தலைவி பேச்சில் வெளிப்படும் பெண்கல்விக்கான கருத்துகளை இன்றைய சூழலுடன் ஒப்பிட்டு எழுதுக.
ஏறுதழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரி.

39. உங்களின் நண்பர், பிறந்தநாள் பரிசாக அனுப்பிய 'கால் முளைத்த கதைகள்' (ஆசிரியர் எஸ்.ராமகிருஷ்ணன்) என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக. (அல்லது)
உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ் – தமிழ் – ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி பத்துப் படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



Scanned with Cam

TNPSC JOB | www.tnpscjob.com

TNPSC JOB



41. கொடுக்கப்பட்டுள்ள பாடலைப் படித்து நயம் பாராட்டுக.

விரிகின்ற நெடுவானில், கடற்பரப்பில்
விண்ணோங்கு பெருமலையில், பள்ளத்தாக்கில்
பொழிகின்ற புனலருவிப் பொழிலில், காட்டில்
புல்வெளியில், நல்வயலில், விலங்கில், புள்ளில்
தெரிகின்ற பொருளிலெல்லாம் திகழ்ந்து நெஞ்சில்
தெவிட்டாத நுண்பாட்டே, தூய்மை ஊற்றே,
அழகு என்னும் பேரொழுங்கே, மெய்யே, மக்கள்
அகத்திலும் நீ குடியிருக்க வேண்டுவேனே!

– ம. இலெ. தங்கப்பா

42. மாணவர்களாகிய உங்களுக்கு இருக்க வேண்டிய பொறுப்புகள் குறித்து ஐந்து வரிகளில் எழுதுக.

(அல்லது)

மொழிபெயர்க்க.

1) Strengthen the body
2) Thinking is great
3) Walk like a bull
4) Union is strength
5) Practice what you have learnt

## பகுதி – V

அனைத்து வினாக்களுக்கும் விடையளி. **3 x 8 = 24**

43. அ) இராவண காவியத்தில் உங்களை ஈர்த்த இயற்கை எழில் காட்சிகளை விவரிக்க.

(அல்லது)

ஆ) வேளாண்மை, நீரை அடிப்படையாகக் கொண்டது என்பதை விளக்குக.

44. 'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக. (அல்லது)

நூலகம், நூல்கள் ஆகியன குறித்து அண்ணாவின் வானொலி உரையில் வெளிப்படுகின்ற கருத்துகளை விளக்குக.

45. குறிப்புகளைப் பயன்படுத்தி, 'கல்வியில் சிறந்த பெண்கள்' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

முன்னுரை – சாதனைப் பெண்கள் – சாவித்திரிபாய் பூலே – முத்துலெட்சுமி – மலாலா – முடிவுரை

(அல்லது)

குறிப்புகளைப் பயன்படுத்தி 'நீரின்றி அமையாது உலகு' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

முன்னுரை – நீரின் இன்றியமையாமை – நீரைச் சேமிக்கும் வழிகள் – எதிர்காலத்தில் நீரின் தேவை – முடிவுரை

Scanned with Cam

TNPSC JOB | www.tnpscjob.com